# LOGIC

# AND

# SCIENTIFIC METHOD

( அளவையியலும் விஞ்ஞான முறையும் )

## போலிகள்

## ( FALLACIES )

பகுதி I

எஸ், எஸ், மனோகரன், B. Com.

# LOGIC

## AND
## SCIENTIFIC METHOD

( அளவையியலும் விஞ்ஞான முறையும் )

# போலிகள்
## ( FALLACIES )

பகுதி I

எஸ். எஸ். மனோகரன், B. Com.

# பொருளடக்கம்


1. போலிகள்
2. நியமமில் போலிகள்
3. மாதிரி வினாக்கள்
(நியமமில்போலிகள்)
4. கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்
5. மாதிரி விடைகள்
(நியமமில்போலிகள்)
6. நியமப்போலிகள்
7. உடன் அனுமானத்தில் எழும் போலிகள்
8. வரைவிலக்கணப் போலிகள்

# 1. போலிகள்
## ( FALLACIES )

உண்மையில் ஏற்றுக்கொள்ளமுடியாத வலிதற்ற நியாயங்கள் வலிதானவைபோலத் தோற்றமளிப்பின் அவையே போலிகள் எனப் படும். கருங்கக்கூறின் நியாயித்தலில் உள்ள ஓர் வழுவே போலியாகும்.

வாதங்கள் மனிதர்களைப்போல் ஏமாற்றும் தன்மை வாய்ந்தவை என பிளேட்டோ எனும் தத்துவ ஞானி குறிப்பிடுகின்றார்.

நியாயித்தலில் ஏற்படும் போலிகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. நியமப் போலிகள் (Formal Fallacies)
2. நியமமில்போலிகள் (Nonformal Fallacies)

### நியமப்போலிகள்

அளவையியல் விதிகளை பின்பற்றத் தவறுவதால் ஏற்படும் போலிகளே நியமப்போலிகள் எனப்படும். இந்த வகையில் போலிக ளைக் கண்டறிய முனையும்போது எடுகூற்றுக்களினதோ, முடிவினதோ அல்லது வாதம் முழுமையினதோ கருத்துக்கள் நோக்கப்படுவதில்லை.

உ-ம் : (1) மழை பெய்தால் நிலம் நனையும்.
நிலம் நனைந்துள்ளது.
∴ மழை பெய்துள்ளது.

இங்கு அளவையியல் விதிகள் மீறப்பட்டு காரிய உடன்பாட்டுப் போலி ஏற்பட்டுள்ளது.

(2) பெண்கள் எல்லோரும் பொறாமையுடையவர்.
ஆண்கள் எல்லோரும் பொறாமையுடையவர்.
∴ ஆண்கள் எல்லோரும் பெண்கள்.

இங்கு தூய அறுதி நியாயத் தொடைக்குரிய அளவையியல் விதி மீறப்பட்டு மத்திய பதம் வியாத்தி யடையாப் போலி ஏற்பட்டுள்ளது.

நியமமில்போலிகள்

எமது சாதாரண உரையாடலில் காணப்படும் ஐயப்பாடு, தெளிவின்மை, சிக்கல் போன்றவற்றின் காரணமாக ஏற்படும் பொருள் (கருத்து) சார்ந்த போலிகளே நியமமில்போலிகள் எனப்படும்.

இப்போலிகளைக் கண்டறிவதற்கு அளவையியல் விதிகளுக்கு அப்பாலும் செல்லவேண்டியுள்ளது.

உ-ம் ; (1) அபின் மனிதனை உறங்கச்செய்கின்றது எனெனில் அதற்கு நித்திரையூட்டும் குணம் உள்ளது.

இது முடிவு மேற்கொளல் எனும் நியமமில் போலியாகும்.

(2) பொழுது விடிந்தமைக்குக் காரணம் அதற்கு முன்னர் கூவிய சேவலாகும்.

இது காகதாலியம் எனும் நியமமில் போலியாகும்.

# 2. நியமமில்போலிகள் (NONFORMAL FALLACIES)

## 1. ஆள் நியாயம் ( Argumentum ad Rominem )

ஒருவரால் உருவாக்கப்பட்ட கருத்தினை அல்லது கொள்கையினை சரியானதோ அல்லது பிழையானதோ என வாதிடுவதற்குப் பதிலாக அவற்றை உருவாக்கிக் கொண்டவரது முன்னுக்குப்பின் முரணான நடவடிக்கைகள், உளவியல் நிலை, குணாதிசயங்கள், சமூகப் பின்னணி மீது இன்னொருவர் கீழ்த்தரமான முறையில் மேற்கொள்ளும் குற்றச்சாட்டுக்களே ஆள்நியாயம் எனப்படும். இந்நியாயம் தவறானதும் பொருத்தமற்றதுமான ஒரு வசை மொழியாகும்.

அரசியலில் இவ்வாறான நியாயங்கள் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. அரசியல் வாதிகள் அதிகமாக தமது எதிராளிகள் மீது தனிப்பட்ட முறையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அல்லது வசைமொழிகளைச் சுமத்துகின்றனர்.

உ-ம் : (1) இவனுடைய கொள்கைகளை இன்று எப்படி ஏற்றுக் கொள்வது? இவன் இதற்குமுன் ஆறுதடவைகள் தன் கொள்கைகளை மாற்றியவன்.

(2) மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் இவ்வரசியல் சட்டத் திருத்தம் பற்றி இப்போது பெரிதாக ஆதரித்துப் பேசுவதையிட்டு எவரும் ஏமாந்துபோகக் கூடாது. ஏனெனில் இவர் இதே அரசியல் சட்டத் திருத்தத்தை முன்பொரு தடவை எதிர்த்தவர்.

## 2. கௌரவ நியாயம்

மதிப்பிற்குரிய ஆதாரம் ஒன்றினைக் காட்டி ஓர் கூற்றை ஏற்கும்படி வேண்டுவதே கௌரவ நியாயம் எனப்படும்.

ஓர் ஆதாரத்தின்பால் கொண்டுள்ள மிக அதிகமான மதிப்பு அல்லது பக்தி காரணமாக தரப்பட்ட கூற்றின் அல்லது வாதங்களின் உண்மையைச் சோதியாது ஒருவர் இப்போலிக்குட்படுகின்றார்.

உ-ம் : (1) நீ இந்த முடிவை ஏற்றுக் கொள்ளவேண்டும் அல்லது இந்த மாற்றத்தை ஆதரிக்க வேண்டும். ஏனெனில் இன்னார் இதனை ஆதரிக்கின்றார்கள்.

(2) "ஆத்மா அழிவில்லாதது" என்பதை ஏற்றுக்கொள். ஏனெனில் பிளேட்டோ அப்படிக் கூறியுள்ளார்.

## 3. தடியடி நியாயம் (அடிதடி நியாயம்) (Argumentum ad baculum)

ஒருவர் தனது அபிப்பிராயத்தையோ அல்லது கூற்றையோ ஏற்க மறுக்கும் ஒருவரை பயமுறுத்தி, அச்சுறுத்துவதன் மூலம் அவற்றை ஏற்கச் செய்ய முனைதலே தடியடி நியாயம் எனப்படும்.

"இந்நியாயம் ஒருவரினது பலத்தைக் காட்டலாமேயொழிய வாதத்தின் செம்மையைக் காட்டாது" என ஸ்ரொக் (Stock) எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

உ-ம் : (1) நான் கூறுவதை நீ ஏற்றுக்கொள். இல்லையேல் அதனால் விளையப்போகும் பின் விளைவுகளை எண்ணிப் பார்.

(2) எங்களுக்கு வாக்களிப்பதே சரியான காரியம் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். ஏனெனில் எங்களுக்கு நீங்கள் வாக்களிக்காவிடில் உங்களுடைய கிராமத்திற்கு அரசாங்க நிதி கிடைக்காது.

## 4. அனுதாபவழி நியாயம் (பரிவு நியாயம்) (Argument by Pity)

ஓர் வாதத்தில் வெற்றிபெறத் தவறான வழியில் அனுதாபத்தைப் பெற முயல்வதே அனுதாப வழி நியாயம் எனப்படும்.

உ-ம் : (1) நீங்கள் எனக்கே வாக்களிப்பீர்கள். ஏனெனில் நான் நான்கு முறை தேர்தலில் தோற்றவன். இந்த முறை யாவது என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்.

(2) எதிரிக்கு ஆறு பிள்ளைகள். மூத்தது இன்னும் பத்து வயது ஆகாத பச்சைக் குழந்தை. தாயுமில்லை. இவன் குற்றமற்றவன் எனத் தீர்ப்பு வழங்கவேண்டும்.

## மாக்கள் நியாயம் (விருப்பு வெறுப்பு நியாயம்) (Argumentum ad populum)

ஒருவர் தனது கருத்து அல்லது முடிவிற்கான உண்மையான ஆதாரங்கள் எதனையும் தராது, சாதாரண அல்லது பாமர மக்களைத் தனது சொற்களின் மூலம் உணர்ச்சிவசப்படுத்தி, அவர்களது விருப்பு வெறுப்புக்களை அனுசரித்து தனது கருத்து அல்லது முடிவினை நிறுவ முயல்வதே மாக்கள் நியாயம் எனப்படும். சுருங்கக் கூறின் பொதுசன உணர்வினால் உந்தப்பட்டு வாதம் புரிதலே மாக்கள் நியாயமாகும்.

உ-ம் : (1) டார்வினின் பரிணாமக் கொள்கையை ஏற்கக் கூடாது. ஏனெனில் அது நம் முன்னோர்களைக் குரங்கின் வழி வந்தவர்கள் எனக் கூறுகின்றது.

(2) குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைத் திட்டத்தை ஏற்க முடியாது. ஏனெனில் அது தனித்துவமும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க எமது இனத்தின் பெருக்கத்தை அழித்தொழிக்கும் கொள்கைத் திட்டமாகும்.

## 6. காகதாலிய நியாயம் (இதன்பின் ஆகவே இதனால்) (Post hoc ergo propter hoc)

காரணமல்லாத ஒன்றைத் தவறாகக் காரணம் எனக் கொள்வதால் ஏற்படுவதே காககாலியம் எனும் போலியாகும். இதில் முக்கியமானது தற்செயலாக நடந்த முன்நிகழ்ச்சியொன்றை அதையடுத்து நடந்த பின் நிகழ்ச்சி ஒன்றிற்குக் காரணம் எனக் கூறுவதால் ஏற்படுவதாகும்.

உ–ம் (1) அந்தத் துர்ப்பாக்கியன் வந்ததும் பெய்துகொண்டிருந்த மழை நின்றுவிட்டது. அவன் வராதிருந்திருந்தால் மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும்.

(2) பொழுது விடிந்தமைக்குக் காரணம், அதற்கு முன்னர் கூவிய சேவலாகும்.

(3) ஆயுள்வேத வைத்தியர் பார்த்தபின் நோயாளி இறந்து போனான். ஆயுள்வேத வைத்தியரை அழைக்காதிருந்தால் நோயாளி பிழைத்திருப்பான்.

(4) மழை பெய்தால் நிலம் ஈரமாகும். ஆகையால் நிலம் ஈரமாக இருப்பின் மழை பெய்திருக்கவேண்டும்.

## 7. முடிவை மேற்கொளல் (முடிவை இரத்தல்) (Petitio Principii)

**அல்லது**

## வினாவை வேண்டல் (Begging the question)

நிருபிக்கப்படவேண்டிய எடுப்பு அல்லது கூற்றொன்று நிருபணமின்றி ஏற்றுக்கொள்ளப்படுதலே முடிவு மேற்கொளல் எனும் போலியாகும். இப்போலி பல வழிகளால் ஏற்படலாம்.

(1) ஒருவர் தனது முடிவிற்கான காரணத்தை அதே முடிவின் வடிவத்திலோ அல்லது அதற்குச் சமமான வடிவத்திலோ தருவதால் இப்போலி ஏற்படுகின்றது. இதனை முடிவின் கூறு மேற்கோடற் போலி என்பர்.

உ–ம்: (1) அபின் மனிதனை உறங்கச் செய்கின்றது. ஏனெனில் அதற்கு நித்திரையூட்டும் குணம் உள்ளது.

(2) அவன் இளவரசன். ஏனெனில் அவன் ராஜ பரம்பரையிலிருந்து வந்தவன்.

(2) ஓர் பொதுத் தத்துவத்தை வெளிப்படையுண்மையெனத் தவறாகக் கொண்டு முடிவினைப் பெறுவதால் இப்போலி ஏற்படுகின்றது. இப்போலி அளவையியல் விதிகளை மீறுவதால் ஏற்படுவதல்ல. பொருள் காரணமாகவே இப்போலி ஏற்படுகின்றது.

உ–ம்: (1) எல்லா விலங்குகளும் சுறுசுறுப்பானவை. ஆமை ஒரு விலங்கு. ஆகவே ஆமை சுறுசுறுப்பானது.

(2) நம் முன்னோர்களின் முடிவுகளைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில் முதியோர்கள் சிறுவர்களை விடப் புத்திசாலிகள்.

(3) எடுகூற்ருய் எடுத்துக்கொள்ளப்படும் முடிவு இடையில் பெரிதோ சிறிதோ ஆன இடையீடு விட்டுப் பின்னர் முடிவுகூற்ருய் தரப் படுவதால் இப்போலி ஏற்படுகின்றது. இதனை 'சக்கர நிரூபணப் போலி' என்பர்.

உ-ம் : (குறியீட்டு வடிவில்)

M, P ஆகும்
S, M ஆகும்
∴ S, P ஆகும்

S, P ஆகும்
M, S ஆகும்
∴ M, P ஆகும்

## 8. அமைப்புப்போலி (சமுதாயப்பேலி / கூட்டுப்போலி) (Fallacy of Composition)

ஒன்றிலடங்கும் பகுதிகளுக்கோ அல்லது அதன் அங்கத்துவங்களுக்கோ பொருந்துவதனை அதன் முழுமைக்கும் பொருந்தும் எனத் தவருகக் கூறுவதால் ஏற்படும் போலியே அமைப்புப் போலி எனப்படும்.

ஒன்றின் பகுதிகளுக்குப் பொருந்துவது அதன் முழுமைக்கும் பொருந்தவேண்டுமென்றில்லை.

உ-ம் : (1) A, B, C, D ஆகிய ஒவ்வொருவராலும் இம்மேசையைத் தூக்க முடியாது. ஆகவே A, B, C, D ஆகிய நால்வராலும் இம்மேசையைத் தூக்கமுடியாது.

(2) கோதுமையில்லாமல் உயிர் வாழலாம்.
அரிசியில்லாமல் உயிர் வாழலாம்.
இறைச்சியில்லாமல் உயிர் வாழலாம்.
முட்டையில்லாமல் உயிர் வாழலாம்.
∴ உணவில்லாமல் உயிர் வாழலாம்.

## 9. பிரிப்புப் போலி (பிரிவுப் போலி) (Fallacy of Division)

ஓர் முழுமைக்குப் பொருந்துவதனை அவற்றிலடங்கும் பகுதிகளுக்கோ அல்லது தனியன்களுக்கோ பொருந்துமெனத் தவறாகக் கூறுவதால் ஏற்படும் போலியே பிரிப்புப் போலி எனப்படும்.

உ-ம்: (1) உணவில்லாமல் உயிர்வாழ முடியாது.
கோதுமை ஓர் உணவு.
எனவே கோதுமையில்லாமல் உயிர்வாழ முடியாது.

(2) அந்தக் குழு மிகவும் திறமையானது. எனவே அக்குழுவிலுள்ள திபனும் மிகத் திறமையானவன்.

## 10. தடத்தப்போலி (வந்தேறிய பொருட்பண்புப்போலி) (Fallacy of accident)

சாதாரண நிலைமைகளில் உண்மையாக உள்ளதனை அசாதாரண நிலைமைகளிலும் உண்மையெனக் கருதுவதாலோ அல்லது விசேட சந்தர்ப்பங்களில் உண்மையாக உள்ளதனை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையெனக் கருதுவதாலோ ஏற்படுவதே தடத்தப் போலியாகும்.

இவற்றுள் முன்னையது நேர்த்தடத்தப்போலி (Direct Fallacy of Accident)எனவும் பின்னையது மறுதலைத்தடத்தப் போலி (Converse Fallacy of Accident) எனவும் அழைக்கப்படும்.

### (1) நேர்தடத்தப் போலி

உ-ம்: (1) கொலை செய்பவர்கள் எல்லோரும் தூக்கிலிடப்படவேண்டியவர்கள். ஆகவே போர் வீரர்கள் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள்.

(2) உறங்குவது நல்லது. ஆகையால் மாணவர்கள் வகுப்பில் உறங்குவது நல்லது.

### (2) மறுதலைத் தடத்தப் போலி

உ-ம்: (1) சாராயம் இவனுக்கு உடல்நலத்தைத் தந்தது. எனவே எல்லோரும் அதனை உட்கொள்ள வேண்டும்.

(2) பொய் சொன்னதால் அவன் பெரும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டான். எனவே, எல்லோரும் பொய் சொல்லவேண்டும்.

## 11. இரட்டுற மொழிதற் போலி (இலக்கண இரட்டுறுப்போலி) (Ambhiboly)

வசன அமைப்பில் ஏற்படும் ஈரடியியல்பினால் ஏற்படும் போலியே இரட்டுறமொழிதற் போலியாகும் அதாவது ஒரு சொற்றொடர் இரண்டு பொருட்களைத் தருவதால் ஏற்படும் போலியே இதுவாகும்.

உ-ம் : (1) திருடர்கள் ஜாக்கிரதை.

(2) நாய்கள் ஜாக்கிரதை.

(3) சட்டம் என் கையில்.

(4) பணம் தேடி இங்கு வந்தனன்.

## 12. அழுத்தற் போலி (உச்சரித்தற்போலி) (Accent)

பேசும்போது ஒரே சொல்லினை வெவ்வேறு வகைகளில் அழுத்தி உச்சரிக்கும்போது அவை வெவ்வேறு பொருட்களில் வருவதால் ஏற்படும் போலியே அழுத்தற்போலி எனப்படும்.

உ-ம் : (1) ''அயல் வீட்டானுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதே'' எனும் கூற்றில் ''அயல்வீட்டுக்காரன்'' எனும் சொல்லை அழுத்தி உச்சரித்தால் அது ஏனையோர்க்கு எதிராகப் பொய்ச்சாட்சி சொல்லலாம் எனப் பொருள்படும். ''விரோதமாக'' எனும் சொல்லை அழுத்திக் கூறினால் சாதகமாக பொய்ச்சாட்சி சொல்வது தவறன்று எனப் பொருள்படும். ''சாட்சி'' என்பதனை அழுத்திச் சொன்னால் சாட்சியாகப் பொய் சொல்வதைவிட வேறு பொய்கள் சொல்லலாம் எனப் பொருள்படும்.

(2) ''பெண்களுக்கு மரியாதை கொடு'' எனும் கூற்றில் ''பெண்களுக்கு' எனும் சொல்லை அழுத்திக் கூறினால் பெண்கள் மட்டுமே மரியாதைக்குரியவர்கள். ஏனையவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டிய அவசியமில்லை எனப் பொருள்படலாம்.

(3) ''புதியவர்களிடம் அன்பாயிருக்க வேண்டும்'' எனும் கூற்றில் ''புதியவர்களிடம்'' எனும் சொல்லினை அழுத்திக் கூறினால் பழையவர்களிடம் அன்பாயிருக்க வேண்டிய அவசியமில்லை எனப் பொருள்படலாம்.

## 13. சொல் அணிப்போலி (பேச்சுவடிவப்போலி) (Fallacy of figure speech)

ஒரே இலக்கணவடிவம் எல்லா இடங்களிலும் ஒரே பொருளில் தான் வரும் என்ற தவறான நம்பிக்கையினால் எழுவதே பேச்சுவடிவப் போலி எனப்படும். அதாவது சொற்களின் வடிவம் ஒன்றாக இருப் பின் அவைகளின் பொருளும் ஒன்றாக இருக்கவேண்டும் எனும் தவறான நம்பிக்கையால் ஏற்படுவதே பேச்சுவடிவப்போலியாகும்.

உ-ம்: பார்க்கப்பட்டது பார்க்கக்கூடியது, கேட்டது கேட்கக்கூடியது. ஆகவே விரும்பப்பட்டது விரும்பப்படக்கூடியது.

இங்கு விரும்பப்பட்டது விரும்பப்படமுடியாததாகவும் இருக் கலாம்.

## 14. கவர்பொருட்பாடு (இருபொருட்போலி) (Homonymia)

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களைத் தரக் கூடிய பதத்தைப் பிரயோகிப்பதால் ஏற்படுவதே கவர்பொருட்பாடு எனும் போலியாகும்.

உ-ம் (1) வாழ்வின்முடிவு இன்பமடைதல் ஆகும்.
இறப்பு வாழ்வின்முடிவு ஆகும்.
∴ இறப்பு இன்பமடைதல் ஆகும்.

இங்கு வாழ்வின் முடிவு எனும் சொல் முதலாவது கூற் றில் ''நோக்கம்'' எனும் பொருளிலும் இரண்டாவது கூற்றில் 'கடைசி நிலை' எனும் பொருளிலும் கையாளப் பட்டுள்ளது.

உ-ம்: (2) கொழுப்புக்கள் யாவும் வெய்யிலில் உருகுவன.
அவன் கொழுப்பு.
∴ அவன் வெய்யிலில் உருகுவான்.

இங்கு கொழுப்பு எனும் சொல் முதலாவது கூற்றில் ''வெண்ணெய்'' எனும் பொருளிலும் இரண்டாவது கூற்றில் ''பருமன்'' எனும் பொருளிலும் கையாளப் பட்டுள்ளது.

## 15. அறியாமை நியாயம் (Argumentum ad ignorantiaum)

நிறுவப்படவேண்டிய முடிவுக்குப் பதிலாக அதுவென மயங்கிய அவசியமற்ற பிறிதோர் எடுப்பை நிறுவ முற்படுவதால் ஏற்படுவதே அறியாமை நியாயம் எனும் போலியாகும். இப்போலி பின்வரும் வழிகளால் ஏற்படலாம்.

(1) ஓர் கூற்றின் மறுப்பு நிறுவப்படாத நிலையிலிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி அக்கூற்றின் விதிப்பை ஏற்கும்படி வேண்டும் போது ஏற்படும்.

உ - ம்: (1) புற்றுநோய் நுண்ணுயிர் எதுவுமில்லை என யாரும் நிருபிக்கவில்லை. ஆகவே, புற்றுநோய் நுண்ணுயிர் ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) கடவுள் இல்லை என்பதனை எவனுமே நிருபிக்க வில்லை. எனவே கடவுள் இருக்கின்றார்.

(2) ஓர் கூற்றின் விதிப்பு நிறுவப்படாத நிலையிலிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி அக்கூற்றின் மறுப்பை ஏற்கும்படி வேண்டும் போது ஏற்படும்.

உ - ம்: (1) கடவுள் உண்டு என்பதனை எவனுமே நிருபிக்க வில்லை. ஆகவே, கடவுள் இல்லை என்பதனை ஏற்றுக்கொள்.

(2) யாழ்ப்பாணத்தில் வேடர்கள் இருந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் யாராலும் இது வரை தரப்படவில்லை. ஆகவே, யாழ்ப்பாணத்தில் வேடர்கள் இருக்கவில்லை.

(3) குறித்த விடயத்திற்குப் புறம்பானவை பற்றி வாதிடுவதால் ஏற்படும்.

உ - ம்: ஒருவன் தான் விற்ற பொருளுக்கான பணத்தைப் பெற வழக்குத் தொடர்ந்தான். பிரதிவாதியோ தான் வாங்கிய பொருளுக்குப் பணம் கொடுத்துவிட்டதாகப் பதிலளித்தான். இந்நிலையில் வழக்காளி தனது கணக்குகளில் அப்பணத்தை வாங்கியதற்கான பதிவு எதுவுமில்லை எனக் கூறுவது இவ்வகைப் போலியாகும். இவ்வழக்கில் வழக்காளியின் கடமை கடன் விற்பனை நடந்ததை தன்வசமுள்ள பத்திரங்கள் மூலம் நிருபிப்பதே

யன்றி பதிவுகள் இல்லாமையினால் பணம் தரப்படவில்லை என்பதனை நிரூபிப்பதன்று. இவ்வாறே பிரதிவாதியின் கடமை தான் பணம் கொடுத்துவிட்டதை தன்வசமுள்ள பத்திரங்கள் மூலம் நிரூபிப்பதேயாகும்.

## 16. அசித்தம் (Non Sequitur)

ஓர் முடிவானது எடுகூற்றுக்களிலிருந்து தருக்கமுறையில் பெறப்படாததன் விளைவாக ஏற்படுவதே அசித்தம் எனும் போலியாகும். அதாவது எடுகூற்றுக்களுக்கும் முடிவுக்கும் தொடர்ச்சியின்மை நிலவினால் அது அசித்தம்.

உ-ம் : (1) அரசாங்கப் பதிவுகள், குற்றங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதைக் காட்டுகின்றது. ஆகவே பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது நல்லதல்ல.

(2) பிரேரிக்கப்பட்ட ஓர் திருத்தத்தை வேண்டாத ஒருவன் கொள்கையளவில் அது நல்லதாயிருக்கலாம், ஆனால் நடைமுறையில் அது தீமையைத் தரும்' எனக் கூறுவது அசித்தத்தின் சாதாரணவோர் உதாரணமாகும். இங்கு நாம் முடிவை ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் அத்திருத்தம் தீயதாய் இருத்தல் என்பது 'கொள்கையளவில் அது நல்லது, என்பதிலிருந்து எழும் விளைவன்று. இங்கு கொள்கையும், நடைமுறையும் முரண்பட்டன என்பது பொருளற்றது. நடாத்துவோனின் திறமையீனம், வெளியார் தலையீடு என்பவை கொள்கை நடைமுறையில் தீமை தருவதற்குக் காரணங்கள் ஆகலாம்.

## 17. சிக்கல் வினாப்போலி (Fallacy of question) அல்லது பல்வினாப்போலி (Fallacy of many questions)

நீதிமன்றங்களில் குறுக்கு விசாரணைகளின்போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் கேட்கப்படும் ஒருவகை வினா சிக்கல் வினாப்போலியாகும். சாதாரண வாழ்விலும் இவ்வாறான வினாக்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். இக்கேள்விக்கு எப்படி விடையளித்தாலும் அது குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவே அமையும்.

உ-ம்: (1) இப்போது உன் தாயாரை அடிப்பதை நீ நிறுத்தி விட்டாயா?

(2) இன்னும் ஞாயிற்றுக்கிழமைகளில் சூதாடுகின்றாயா?

(3) இப்போதும் மது அருந்தும் பழக்கமுண்டா?

# 3. மாதிரி வினாக்கள்

## ( நியமமில்போலிகள் )

பின்வரும் உரைப்பகுதிகளில் இடம்பெறும் போலிகளை இனம் கண்டு விளக்குக.

1. A கூறுவதை B ஏற்கக்கூடாது. காரணம் பல ஆண்டுகளுக்கு முன்பு B இதற்கு முரணான கருத்தைக் கொண்டிருந்தான்.

2. பாவம் சிவராமன்! வியாழக்கிழமையொன்றில் அவன் தன் தொழிலை ஆரம்பித்தான். தொழில்ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள்ளேயே தொழில் முறிந்துபோயிற்று. ஸ்ரீ வியாழன் கழுத்தையறுக்குமென்பது அவனுக்குத் தெரியாமல் போயிற்று. வியாழக்கிழமையொன்றில் தொழிலை ஆரம்பித்தமையே அத்தொழில் முறிந்துபோனமைக்குக் காரணமாகும்.

3. பரிணாம வளர்ச்சி பொய். ஏனெனில் பைபிள் கடவுளின் படைப்பைப்பற்றிக் கூறுகின்றது.

4. சேர்! எனக்கு சித்திபெறக்கூடிய புள்ளியை வழங்குங்கள் இல்லாவிடில் என் தந்தையார் என்னை அடிப்பார்; உதைப்பார்; திட்டுவார்; நானும் அவமானத்தால் படிப்பை விட்டுவிடலாம்.

5. பறப்பவை எவையும் பாலூட்டிகள் அல்ல. வெளவால்கள் பறப்பவை. எனவே வெளவால்கள் பாலூட்டி அல்ல.

6. ஆன்மா நீடுழி வாழ்வது. ஆதலால் ஆன்மா அழிவில்லாதது.

7. இனிப்புக்கள் நீரில் கரையும். தீபன் இனிமையானவன். இதனால் திபன் நீரில் கரைபவன்.

8. வேலை நிறுத்தத்தில் ஈடுபடு! இல்லாவிடில் நான் உன்னை உதைப்பேன்.

9. மறுபிறப்பு பொய் என்பதற்கு நிருபணமில்லை. எனவே மறுபிறப்பு என்பது உண்மை.

10. அந்த நாட்டின் அமைச்சர் குழு மிகவும் திறமையானது. கல்வி அமைச்சர் அக்குழுவில் ஒருவர். எனவே அந்நாட்டின் கல்வி அமைச்சர் மிகவும் திறமையானவர்.

11. இந்த ஆங்கிலத் திரைப்படம் மிகவும் அற்புதமானது. ஏனெனில் எமது நாட்டின் கிரிக்கட் அணியின் தலைவர் அப்படிக் கூறியுள்ளார்.

12. எல்லாக் கொலையாளிகளும் குற்றவாளிகள். எல்லாப் போர் வீரர்களும் கொலைகாரர்கள். ஆகவே எல்லாப் போர்வீரர்களும் குற்றவாளிகள்.

13. எங்களோடு இணைந்துகொள்வதே புத்திசாலித்தனம் என்பது உனக்குப் புரிய வேண்டும். இல்லாவிடில் எதிர்பாராத பெரும் பிரச்சனைகளையெல்லாம் நீ எதிர்நோக்க நேரிடும்.

14. பண்ணையார் பரமலிங்கம் எதைச் சொன்னாலும் தட்டாமல் செய். இல்லையேல் ஒரு வாய் கஞ்சிக்கே நாயாய் அலைய நேரிடும்.

15. குமுதினிக்கு நல்ல சந்தோஷம். ஏனெனில் அவளுக்கு நல்ல மகிழ்ச்சி.

16. விலைவாசிகள் உயர்ந்துவிட்டது என இராமன் கூறுவதில் உண்மையில்லை. ஏனெனில் இராமன் ஜி. சி. ஈ. பரீட்சையில் மூன்று தடவைகளும் சித்தியடையத் தவறியவன் என்பது எங்கள் எல்லோருக்குமே தெரியும்.

17. படித்த பெண்கள் காலம் தாழ்த்தியே திருமணம் செய்வர். இவள் ஒரு படித்த பெண். எனவே இவள் காலம் தாழ்த்தியே திருமணம் செய்திருக்க வேண்டும்.

18. பிறப்பிலிருந்தே அவனுடைய இரு காதுகளுக்கும் கேட்குமாற்றல் இல்லை. ஏனெனில் அவன் ஒரு செவிடன்.

19. இவனுக்கு வயது 13. இதுதான் இவனது முதல் குற்றமும். இவனை நம்பி ஆறு சகோதரிகள் உள்ளனர். இவனது தந்தையாரும் தாயாரும் நோயாளிகள். எனவே இவனைக் குற்றமற்றவன் எனத் தீர்ப்பளிக்க வேண்டும்.

20. இந்த மரம் வைரமானது. அந்த மரம் வைரமானது. எனவே எல்லா மரங்களும் வைரமானவை தான்.

21. பார்த்தீர்களா? அந்தத் துர்ப்பாக்கியன் வந்ததும் பெய்து கொண்டிருந்த மழை நின்றுவிட்டது. அவன் வராமலிருந்திருந்தால் மழை பெய்துகொண்டிருக்கும்.

22. சதாசிவம் ஆசிரியர் கடந்தமுறைத் தேர்தலில் முதலாளித்துவ கட்சி நல்லதென்றார். இந்தமுறைத் தேர்தலில் சோசலிசக்கட்சி நல்லதென்கிறார். இவரது இக்கருத்தை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது?

23. உங்களுடைய வாக்குமூலங்கள் அனைத்தையும் நன்றாக ஆராய்ந்து பார்த்துவிட்டேன். ஆனால் உங்களில் எவராவது தீபன் கொலை செய்யவில்லை என்பதை நிரூபிக்கவில்லை. எனவே தீபன்தான் இக்கொலையைச் செய்துள்ளான் என நான் முடிவு செய்கிறேன்.

24. விரைவில் சுயாட்சி கிடைக்கும் என்பதை ஏற்றுக்கொள். ஏனெனில் பிரபல சோதிடர் நாராயணன் அப்படிக் கூறியுள்ளார்.

25. இந்த மாணவன் சென்ற வருடம் விஞ்ஞானக் கல்வியே சிறந்த தென்றான். இப்போது வர்த்தகக் கல்வியே சிறந்ததென வாதிடுகிறான். அதற்கு அவன் அநேக காரணங்களைக் காட்டுகிறான். எனவே இவன் வர்த்தகக் கல்வியே சிறந்ததென வாதிடுவதையிட்டு நாம் எமது நேரத்தை வீணடிக்கவேண்டியதில்லை. ஏனெனில் அவன் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறான்.

26. வாலிபர்கள் அனைவரும் எம்மை ஆதரிக்கவேண்டும். எம்மை ஆதரிப்பதே சரியான காரியம் என இளைஞர்களுக்குப் புரிய வேண்டும். இல்லாவிடில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டங்கள் எதுவுமே மேற்கொள்ளப்பட மாட்டாது என எச்சரிக்கின்றேன்.

27. இவன் ஓர் பயங்கரமான கொள்ளைக்காரன் என்பது உண்மைதான். எனினும் இவனது பொறுப்பில் பன்னிரண்டு சகோதரிகள் உளர். எனவே இவனைக் குற்றமற்றவன் எனத் தீர்ப்பளிக்க வேண்டும்.

28. அதிஸ்டத்திற்குரிய அவனது மோதிரம் தொலைந்து விட்டது. இனிமேல் அதிஸ்டம் அவன் பக்கத்திலில்லை

29. குறிப்பிட்ட வயதினர் அனைவரும் இக்கருத்தினைப் பெரிதாக வரவேற்கின்றனர்; ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் எனக்குத் தெரியும். இது கொள்கையளவில் நல்லதாயிருக்கலாம். ஆனால் நடைமுறையில் இது தீமையைத் தரும் என்பதை இவர்கள் உணரவில்லை.

30. கடவுள் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள். ஏனெனில் நியூட்டனே கடவுள் நம்பிக்கையுடையவர்.

31. இவர் தம் இனத்திலேயே திருமணம் செய்துகொண்டவர். ஆனால், இப்போதோ கலப்புத் திருமணத்தை ஆதரிக்கிறார். எனவே, இவரது கருத்து ஏற்புடையதல்ல.

32. பூனை குறுக்கே போனதால்தான் அவன் விபத்தில் மாட்டிக் கொண்டான். பூனை குறுக்கே போகாதிருந்தால் அந்த விபத்து நிகழாதிருந்திருக்கும்.

33. விரைவில் போர் வரும் என்பதை ஏற்றுக்கொள். ஏனெனில் கலாநிதி கந்தையா அப்படிக் கூறியுள்ளார்.

34. அவன் மிகவும் பலவீனமானவன். ஒரு காலும் நன்றாக வழங்காது. எனவே அவனுக்கே இம்முறை தேர்தலில் வாக்களியுங்கள்.

35. இந்தப் பழம் இனிப்பானது. ஏனெனில் அதற்கு இனிக்கும் குணமுண்டு.

36. மத்திய கல்லூரி கிரிக்கட் கோஷ்டி மிகவும் திறமையானது. எனவே அக்கோஷ்டியிலுள்ள தீபனும் மிகவும் திறமையானவன்.

37. வடமாகாணத்திலேயே மிகச் சிறந்த அளவையியல் ஆசிரியர் சுருட்டு சுந்தரலிங்கம்தான். யாழ்ப்பாணத்திலேயே மிகச்சிறந்த பானம் பனங்கள்ளுத்தான் என அவர் கூறுகின்றார். இதற்கு மேல் வேறு என்ன ஆதாரம் வேண்டும்.

38. வேட்பாளர் சுந்தரலிங்கம் கூறுவதை நீங்கள் கேட்டு ஏமாறக் கூடாது. ஏனெனில் இவருடைய தந்தை இரண்டு தடவைகள் சிறைக்குச் சென்றவர்.

39. முதலாளித்துவக்கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து நாட்டில பெரும் வரட்சி நிலவுகின்றது. முதலாளித்துவக் கட்சி ஆட்சிக்கு வராதிருந்தால் நாட்டில் பெரும் வரட்சி நிலவியிருக்காது.

40. நான் சொல்வதையெல்லாம் மறுப்பேதுமில்லாமல் நீ ஏற்றுக் கொள். இல்லையேல் பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்க நேரிடும்.

41. செவ்வாயில் மனிதர் இல்லை என்பதனை எவருமே நிரூபிக்கவில்லை. எனவே செவ்வாயில் மனிதருண்டு.

42. நான் உனக்கு விற்ற பொருட்களுக்காக பணம் தந்துவிட்டதாக நீ கூறுகின்றாய். ஆனால் இங்கே நன்றாகப் பார். எனது கணக்குப் புத்தகங்களில் அப்பணத்தை நீ தந்ததற்கான பதிவுகள் எதுவுமில்லை. இதைவிட எனக்கு வேறென்ன ஆதாரங்கள் வேண்டும்?

43. எல்லா ஆண்களும் மன உறுதி படைத்தவர்கள். ராமன் ஒரு ஆண்மகன். எனவே அவன் மன உறுதி படைத்தவன்.

44. இங்குள்ள குடிகாரர்கள் பிரச்சனைக்குரியவர்கள் என்பதையிட்டு ஏன் திகில் அடைகின்றீர்கள்? குடிகாரர்கள் எப்போதும் பிரச்சனைக்குரியவர்கள் என்பது மறுக்கமுடியாத ஒரு பாடமாகும். ஏனெனில் குடிகாரர்கள் தொல்லைக்குரியவர்களே.

45. நீ என் எதிரியின் ஆள். எனவே நீ கூறும் நியாயங்களை நான் கருத்தில் கொள்ள முடியாது.

46. ஒரு தாவரத்தின் எந்தப் பகுதியைச் சோதித்தாலும் அங்கு முத்துக்கள் இல்லையென்பது பெறப்படும். ஆகவே தாவரத்தில் முத்துக்களில்லை என்பது வெளிப்படை.

47. அவர் கடந்த இருபதாண்டுகளாக கணிதம் கற்பிக்கிறார். எந்த ஒரு மாணவனும் இதுவரை அவர் சிறந்த முறையில் கற்பிக்கவில்லை எனக் குறைகூறவில்லை. இதனால் அவர் சிறந்த முறையில் கற்பிக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

48. அவன் நூறு திரைப்படங்களுக்கு மேல் நடித்துள்ளான். அவன் நூறு திரைப்படங்களுக்கு மேல் நடித்தென்ன? திரைப்படங்களில் நடிக்கும் அநேகர் உண்மையில் நடிகர்களேயல்ல.

49. நான் பார்க்கும்போதெல்லாம் அவள் தலையில் மல்லிகை மலர் ஒன்றிருக்கும் நான் ஒருபோதும் அவளை கவர்ச்சி குன்றியவளாகக் கண்டதேயில்லை. எனவே தலையில் மல்லிகை மலர் ஒன்றை எப்போதும் வைத்திருக்க வேண்டும் என என் காதலிக்கு ஆலோசனை கூறப்போகின்றேன். ஏனெனில் அவள் கவர்ச்சியானவளாகத் திகழவேண்டும் என்பதே என் விருப்பம்.

50. மானிப்பாய் தொகுதியில் கசிப்பு காய்ச்சப்படுகிறது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் யாராலும் இதுவரை தரப்படவில்லை. இதிலிருந்து மானிப்பாய் தொகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுவதில்லை என நாம் அனுமானிக்கலாம்.

51. அவன் ஓர் குடிகாரன். ஏனெனில் அவன் மது அருந்துபவன்.

52. ஷேக்ஸ்பியரின் எல்லா நாடகங்களையும் ஒரே நாளில் படிக்க முடியாது. ஹாம்லெட் அவரது நாடகம். ஆகவே அதனை ஒரே நாளில் படிக்கமுடியாது.

53. எல்லாக் கேள்விகளும் 100 மதிப்பெண் பெற்றுள்ளன. கடைசிக் கேள்வி அதில் ஒன்று. எனவே கடைசிக் கேள்வி 100 மதிப்பெண்கள் உடையது.

54. தீபனாலோ அல்லது ரூபனாலோ அல்லது இராமனாலோ அந்த மேசையைத் தூக்கமுடியாது. ஆகையால் தீபன், ரூபன் இராமன் ஆகிய மூவராலும் அந்த மேசையைத் தூக்கமுடியாது.

55. ஒருவன் உணவில்லாமல் வாழமுடியும். ஏனெனில் ஒருவன் கோதுமை இல்லாமல் வாழலாம். அரிசி இல்லாமல் வாழலாம். மாமிசம் இல்லாமல் வாழலாம்.

56. தம்பி! கணிதபாடத்தோடு நீ படாதபாடு படுகின்றாய். அதைப் பற்றிய அனேக விதிகள் உனக்கு விளங்குவதுமில்லை. எனவே கணிதபாடம் மிகவும் கடினமானதென்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.

57. அவன் பேசுவதெல்லாம் பொய். ஏனெனில் அவன் என்றுமே உண்மை பேசுவதில்லை.

58. அடுத்தவீட்டு நாய் ஏன்தான் ஊளையிட்டதோ? தீபன் இறந்தே போனான். அடுத்த வீட்டு நாய் ஊளையிடாதிருந்தால் தீபன் இறவாதிருந்திருப்பான்.

59. முதலாளித்துவ கட்சி பதவிக்கு வந்ததிலிருந்து நாட்டில் கடும் வரட்சி நிலவுகிறது. முதலாளித்துவ கட்சி பதவிக்கு வராதிருந்தால் வரட்சி என்ற சொல்லுக்கே இடமில்லை.

60. அவன் ஒரு குருடன் ஏனெனில் அவனது இரு கண்களுக்கும் பார்க்கும் ஆற்றலில்லை.

61. நாம் அவரது அபிப்பிராயத்தை ஏற்கவேண்டும். ஏனெனில் அவர் எமது சமூகத்தின் நன்மைக்காகவே பேசி வருகிறார்.

62. பல்கலைக்கழகக் கல்வியைக் கட்டுப்படுத்தாதபடியினாலேயே பல்கலைக்கழகங்களில் மாணவர் கலவரங்கள் அதிகரித்துள்ளன.

63. இந்த மசோதாவின் நன்மைகளைப் பற்றிய அவரது முடிவினை ஏற்கமுடியாது. ஏனெனில் தற்போதைய அரசாங்கத்திடமிருந்து அவர் பல சலுகைகளைப் பெற்றுள்ளார்.

— 3

64. இந்த வாகனத்தின் ஒவ்வொரு உதிரிப்பாகங்களும் பாரம் குறைந்தது. ஆகவே இந்த வாகனம் பாரம் குறைந்தது.

65. இந்த மொட்டு மலரும். ஏனெனில் அதற்கு பூக்கும் குண முண்டு.

## 4. கடந்தகால பரீட்சை வினாக்கள்

### ( நியமமில்போலிகள் )

**ஆகஸ்ட்: 82**

9. பின்வரும் ஒவ்வொன்றிலும் உள்ள போலியை இனங்கண்டு அதன் இயல்பினை விளக்குக.

(அ) புற்றுநோய் நுண்ணுயிர் எதுவுமில்லை என யாரும் நிரூபிக்கவில்லை. ஆகவே புற்றுநோய் நுண்ணுயிர் ஒன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) எதிரிக்கு ஆறு பிள்ளைகள். மூத்தது இன்னும் பத்து வயது ஆகாத ஓர் பச்சைக் குழந்தை. தாயுமில்லை. இவன் குற்றமற்றவன் எனத் தீர்ப்பு வழங்கவேண்டும்.

(இ) இந்த இசை ஆட்களை மகிழ்ச்சியடையச் செய்கிறது என்பதையிட்டு ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள் ? ஆட்கள் இந்த இசையைக் கேட்கும்போது மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பது இயற்கையே. ஏனெனில் இந்த இசை சந்தோஷமான இசை.

(ஈ) ஆயுள்வேத வைத்தியர் பார்த்தபின் நோயாளி இறந்து போனான். ஆயுள்வேத வைத்தியரை அழைக்காதிருந்தால் நோயாளி பிழைத்திருப்பான்.

(உ) எங்களுக்காக வாக்களிப்பதே சரியான காரியம் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். ஏனெனில் எங்களுக்கு நீங்கள் வாக்களிக்காவிடில் உங்களுடைய கிராமத்திற்கு அரசாங்க நிதி கிடைக்காது.

**ஆகஸ்ட்: 83**

9. பின்வருவனவற்றின் இயல்பினை உதாரணங்களும் தந்து விளக்குக.

(i) தடியடி நியாயம்
(ii) ஆள் நியாயம்
(iii) அறியாமை நியாயம்
(iv) பரிவு நியாயம்
(v) முடிவு மேற்கொள்போலி

10. பின்வரும் உரைப்பகுதியில் இடம்பெறும் போலி நியாயத்தை இனங்கண்டு அதன் இயல்பினை விளக்குக.

(i) பண்டைய இலங்கையில் முதலைகள் இருந்தன என்பதற்கான ஆதாரம் எதுவும் யாராலும் இதுவரை தரப்படவில்லை. இதிலிருந்து பண்டைய இலங்கையில் முதலைகள் இருக்கவில்லை என அனுமானிக்கலாம்.

(ii) என்னுடைய அம்மா எண்ணெய் பாவிப்பதை நிறுத்திய பின் விரைவில் அவளின் தலைமயிர் எல்லாம் நரைத்துப் போனது. ஆகவே, எண்ணெய் பாவியாது விட்டதே அவளின் தலைமயிர் நரைத்ததன் காரணம் எனலாம்.

(iii) X எனும் கொள்கையே சிறந்தது. ஏனெனில் அதனை நாம் ஏற்காவிடில் எமக்குப் பாரதூரமான நெருக்கடி ஏற்படும்.

(iv) அவன் சொல்வதை நாம் நம்பவேண்டும். ஏனெனில் தான் உண்மை பேசுவதாக அவன் உறுதியாகக் கூறியிருக்கின்றான்.

## ஆகஸ்ட்: 84

9. பின்வரும் போலிகளின் இயல்பினை உதாரணங்கள் தந்து விளக்குக.

(i) காகதாலிய நியாயம்
(ii) அறியாமை நியாயம்
(iii) ஆள் நியாயம்
(iv) பிரிவுப்போலி
(v) தடியடி நியாயம்

10. பின்வரும் உரைப்பகுதிகளில் இடம்பெறும் போலிகளை இனங்கண்டு விளக்குக.

(i) உங்களுடைய அறிக்கைகள் எல்லாவற்றையும் வாசித்துவிட்டேன். நீங்கள் சொல்லிய அனைத்தையும் பொறுமையாயும் கவனமாயும் கேட்டுக்கொண்டேன். உங்களில் எவரும், உங்களில் எவரது அறிக்கையும் முதலைகளுக்கு பல் உண்டு என்பதற்கான ஆதாரம் எதனையும் தரவில்லை. ஆகவே முதலைகளுக்கு பல் இல்லை என நான் முடிபு செய்கிறேன்.

(ii) நீ X கட்சியைச் சேர்ந்தவன். ஆகவே நீ கூறுவதை நாம் முக்கியமாகக் கொள்ள முடியாது.

(iii) இங்குள்ள எமது நண்பர் சென்ற வருடம்தான் உருளைக் கிழங்குக்காக வாதித்தவர். இப்போது அவர் இராசவள்ளிக்காக வாதிக்கிறார். அவர் அநேக நியாயங்களைக் கூறுகிறார். ஆனால் இராசவள்ளிக்காக அவர் தரும் வாதங்களைக் கேட்பதில் நாம் எமது நேரத்தை விரயம் செய்ய வேண்டியதில்லை.

(iv) ஒரு மனிதனது எந்தப் பகுதியைச் சோதித்தாலும் அதில் மனம் இல்லை எனக் காண்பீர்கள். ஆகவே மனிதருக்கு மனம் என்பதில்லை என்பது தெளிவு.

(v) எனக்கு நினைவுள்ளவரை ஒவ்வொருநாளும் நான் கொஞ்சம் கொத்தமல்லி உட்கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு ஒரு போதும் ஆஸ்துமாவினால் தொல்லை ஏற்படவில்லை. நீயும் ஒவ்வொருநாளும் கொஞ்சம் கொத்தமல்லி எடுக்க வேண்டும் என்பது எனது புத்திமதி. உன்னுடைய ஆஸ்துமா பறந்துபோகும்.

**ஆகஸ்ட்: 85**

9. பின்வரும் போலிவகைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(i) முடிவை இரத்தற்போலி (iv) அடிதடி நியாயம்
(ii) மாக்கள் நியாயப்போலி (v) காகதாலிய நியாயம்
(iii) அறியாமை நியாயப்போலி

10. பின்வரும் ஒவ்வொன்றிலும் இடம்பெறும் போலியை இனம் கண்டு விளக்குக.

(i) அவர் கடந்த இருபதாண்டுகளாக அரசியலில் ஈடுபட்டிருக்கிறார். அரசியல்வாதிகளைப் பற்றி எப்படியெல்லாம் ஆட்கள் கதைப்பார்கள் என்று உனக்குத் தெரியும். ஆனால் இந்த இருபது வருடத்திற்கும் அவரைப்பற்றி ஒரு இழிவான கதையும் இல்லை. அவர் மிகவும் ஒழுக்கமான மனிதர் என்பது தெளிவாகிறது.

(ii) படித்த ஆளை நியமிப்பதால் என்ன பயன்? பட்டங்கள் பெற்ற பலர் உண்மையில் படித்தவர்களல்லர்.

(iii) உனது கண்களையும் காதையும் திறந்து வைத்திருந்தால் உனக்கு விஷயம் இலகுவில் விளங்கும். வண்டி புறப்படும் போதெல்லாம் மணி அடிக்கிறது என்று நீ கண்டுகொள்வாய்.

(iv) இந்த மந்திரிசபை மிகவும் கெட்டித்தனமுள்ளது என்பது வெளிப்படை. ஆகவே மந்திரி X உம் கெட்டிக்காரர் என்பது வெளிப்படை.

(v) உலகு கண்ட குத்துச்சண்டை வீரர்களுள் பெரியவன் முகமதுதான். உலகிலேயே ஊட்டச்சத்து கூடிய பானம் கொத்தமல்லிதான் என்று அவனே சொல்கிறான். இதற்கு மேல் என்ன ஆதாரம் வேண்டும்?

**ஆகஸ்ட்: 86**

9. பின்வரும் ஒவ்வொன்றிலும் இடம்பெறும் போலியை இனங் கண்டு அதன் இயல்பை விளக்குக.

(i) T எனும் காலத்தில் X, Y இல் வாழ்ந்தான் என்பதற்கு எவ்வகை நிருபணமும் இல்லை. ஆனால் Z அக்காலத்தில் அங்கு வாழ்ந்தான் என்பதற்குப் போதிய நிருபணம் உண்டு. எனவே T எனும் காலத்தில் Y இல் Z மட்டுமே வாழ்ந் தான் எனவும் X வாழவில்லை எனவும் முடிவு செய்யலாம்.

(ii) தனக்கு கொடுக்கப்பட்ட ஒன்பது விலாசங்களுக்கு தபால் களை அனுப்பத் தவறியதன்மூலம் இத்தபாற் சங்கிலியைச் சிதைத்த பெரியகோட்டு நீதவான் ஒருவருக்கு ஒரு வாரத் திற்குள் மாரடைப்பு ஏற்பட்டது. தாமதமின்றித் தபால் களைப் போட்டிருந்தால் அவர் இன்னும் உயிருடனிருந் திருப்பார்.

(iii) X கட்டுப்பாடு குறைந்த Y கோஷ்டியைச் சேர்ந்தவனா தலால் X உம் கட்டுப்பாடற்றவனாவான்.

(iv) எனது பிரேரணைக்கு எதிராகப் பேசவேண்டாமென்று எனது நண்பரை நான் எச்சரிக்கவேண்டும். ஏனெனில் விரைவில் தனது வாக்காளர்களுக்குத் தான் முகம்கொடுக்க வேண்டு மென்பதை அவர் மறந்துவிடலாகாது.

10. பின்வரும் போலிகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் தருக.

(i) அமைப்புப்போலி (ii) தடத்தப்போலி
(iii) மாக்கன் நியாயம் (iv) முடிவுமேற்கொளல்

**ஆகஸ்ட்: 87**

கீழ்வரும் போலிகளைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(i) முடிவு மேற்கொளல்போலி (ii) மாக்கன் நியாயம்
(iii) அசித்தம் (iv) ஆள் நியாயம்

ஆகஸ்ட்: 88

கீழ்வரும் பந்திகளில் இடம் பெற்றுள்ள போலிகளை இனங்கண்டு சுருக்கமாக விளக்குக.

(i) 'தொழிலாளர் வர்க்கத்திற்குக் கெடுதி செய்யும் முதலாளித்துவம் ஒரு தீமைதரும் பொருளாதார அமைப்பு என்பதை நிலை நாட்டுவதில் உண்மையில் கார்ல்மாக்ஸ் தவறிழைத்துவிட்டார். ஏன், தனது குடும்பத்திற்குத் தேவையான பணத்தைத் தேடுவதிற் கூட அவர் கண்டது துக்கம் நிறைந்த தோல்வியே.'

(ii) உலக அழகி தனது தலைவலியைப் போக்குவதற்கு X மாத்திரையை எடுக்கிறாள். உலக அழகிக்குப் பல தலைவலிகள் உள்ளன என்பதில் ஐயமில்லை. ஆகவே X மாத்திரைதான் தலைவலிக்குரிய சிறந்த மருந்தாகும்.

(iii) கடந்த தடவை நான் வெற்றியீட்டினேன். எனக்கு எதிராக வேலை செய்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் பெற நான் விதப்புரை வழங்கவில்லை. இந்த தடவையும் நானே வெற்றியீட்டுவேன் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் குடும்பங்களுக்குத் தொழில் தேவைப்படும்; ஆகவே எனக்காகப் பாடுபடுங்கள்; இல்லையெனில் நீங்கள் தவறிழைத்தவர்களாவீர்கள்.

(iv) ''பசியினால் வாடும் எனது மனைவிக்கும் பசியினால் வாடும் எனது எட்டுக் குழந்தைகளுக்கும் உணவளிக்க வேண்டிய நிலையிலிருப்பதால் நான் சம்பள உயர்வுக்கு தகுதியுடையவன் ஐயா!''

(v) ''நீ ஒரு தொழிலாளியாயின் நீ தொழிலாளருக்காக உருக வேண்டும். அவர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும். ஆகவே நீ அவசியம் சமவுடமைவாத வேட்பாளருக்கே உனது வாக்குகளை அளித்தல் வேண்டும்''.

ஆகஸ்ட் : 89

11. பின்வரும் பந்தியிலுள்ள போலிகளை இனங்கண்டு அவற்றைச் சுருக்கமாக விபரிக்கவும்.

(அ) சைவக் கறி சுவையானதல்ல, ஏனெனில் அதில் உள்ளடங்கிய எதுவும் சுவையுள்ளதல்ல.

(ஆ) இந்த நூல் நிச்சயமாகத் தரமற்றது (rubbish) ஏனெனில் இந்நூலாசிரியர் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர். அத்துடன் அவர் க. பொ. த. உயர்தரப் பரீட்சையிற் கூடச் சித்தி எய்தவில்லை.

(இ) சொட்டுப் பொறியியல் (quantum mechanics) பற்றிய கொப்பன்கேகன் குழுவினது விளக்கத்தை ஐயன்ஸ்ரைன் எதிர்க்கிறுரென்பதுடன் ஐயன்ஸ்ரைன் அக்காலத்தில் தலைசிறந்த பௌதிகவியலாளருமாவார். எனவே கொப்பன்கேகன் குழுவினரது சொட்டுப் பொறியியல் பற்றிய விளக்கத்தில் நிச்சயமாகத் தவறுளது'

(ஈ) இப்பெண்ணை நீ மணம்புரியாதுவிடின் எனது சொத்துக்கள் எவையும் உனக்குக் கிடைக்காது. எனவே இப்பெண்ணை நீ திருமணம் புரிதல் வேண்டும்.

(உ) ஒருவருடைய தருக்க ரீதியிலமையாக் கூற்றுக்களிலிருந்து அவருடைய முட்டாள்த் தனத்தை அனுமானித்துக் கொள்ளலாம் ஏனெனில் முட்டாள்களே தர்க்கரீதியிலமையாத கூற்றுக்களைக் கூறுபவர்களாவார்கள்.

## பொது

9. (அ) ''எல்லா இலங்கையரும் பொய்சொல்லுபவர்கள்'' என இலங்கையரான பெரேரா கூறினார். பெரேராவின் மேற்படி கூற்றின் உண்மையை ஐயுறுதற்கான நியாயங்கள் யாதேனும் உளதென நீர் கருதுகின்றீரா?

(ஆ) அப்பெண்ணைத் திருமணம் செய்ததன் மூலம் அவன் ஒரு பைத்தியக்காரச் செயலைச் செய்துவிட்டான். பைத்தியக்காரர் அனைவரும் அங்கொடைக்கு அனுப்பப்படவேண்டியவர்கள். ஆகவே அவன் அங்கொடைக்கு அனுப்பப்பட வேண்டியவனாவான்.

மேற்படி வாதத்தில் யாதேனுமொரு போலி உளதென நீர் கருதுகின்றீரா? அவ்வாறாயின் அப்போலி யாதெனக் கூறுக.

(இ) ''இந்த மனிதனுடைய தகப்பனார் எனது தகப்பனாரின் மகன்'' அந்த மனிதன் யாராயிருக்கலாம்?

(ஈ) ''நீர் வீடு செல்வீராயின் உமது மனைவி இறக்க நேரிடும் நீர் போகும் வழியில் தங்குவீராயின் நீர் இறக்க நேரிடும்'' மேற்படி கூற்று எத்தகைய தருக்க நிலைப்பாட்டிற்குரிய உதாரணமாகும்.

உமது விளக்கத்திற்குப் பொருந்தும் வகையிலான மேற்படி கூற்றின் சாத்தியமான குறியீட்டு வடிவத்தைத் தருக.

(உ) A என்பவர் B யின் சகோதரராவர். எப்பொழுது A யுக்கும் B யுக்கு மிடையிலான உறவுமுறை சமச்சீருள்ளதாயிருக்கும்? எப்பொழுது இவ்விருவருக்குமிடையிலான தொடர்பு சமச்சீரில்லாததாய் இருக்கும்?

# 5. மாதிரி விடைகள்

## ( நியமமில்போலிகள் )

பின்வரும் உரைப்பகுதிகளில் இடம்பெறும் போலி நியாயத்தை இனம் கண்டு விளக்குக.

(1) வினா: பண்டைய இலங்கையில் முதலைகள் இருந்தன என்பதற்கான ஆதாரம் எதுவும் யாராலும் இதுவரை தரப்படவில்லை. இதிலிருந்து பண்டைய இலங்கையில் முதலைகள் இருக்கவில்லை என அனுமானிக்கலாம்.

விடை: இது அறியாமை நியாயம் எனும் போலியாகும். நிறுவப்பட வேண்டிய முடிவுக்குப் பதிலாக அதுவென மயங்கிய அவசியமற்ற பிறிதோர் எடுப்பை நிறுவ முற்படுவதால் ஏற்படுவதே அறியாமை நியாயம் எனும் போலியாகும்.

ஓர் கூற்றினுடைய விதிப்பு நிறுவப்படாத நிலையிலிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி அக்கூற்றின் மறுப்பை ஏற்கும்படி வேண்டுவது அறியாமை நியாயப் போலியினுள் அடங்கும். மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் ''பண்டைய இலங்கையில் முதலைகள் இருந்தன'' என்பது நிறுவப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி ''பண்டைய இலங்கையில் முதலைகள் இருக்கவில்லை'' என்பதை ஏற்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

(2) வினா: படித்த ஆளை நியமிப்பதால் என்ன பயன்? பட்டங்கள் பெற்ற பலர் உண்மையில் படித்தவர்களல்லர்.

விடை: இது அசித்தம் எனும் போலியாகும். ஓர் முடிவானது எடுகூற்றுக்களிலிருந்து தருக்கமுறையில் பெறப்படாததன் விளைவாக ஏற்படுவதே அசித்தம் எனும் போலியாகும். அதாவது எடுகூற்றுகளுக்கும் முடிவுக்கும் தொடர்ச்சியின்மை நிலவினால் அதுவே அசித்தம்.

மேற்கூறப்பட்ட உரைப் பகுதியில் தரவுகளுக்கும் முடிவுக்குமிடையில் தொடர்ச்சியின்மை நிலவுகின்றது.

(3) வினா: X எனும் கொள்கையே மிகவும் சிறந்தது. ஏனெனில் அதனை நாம் ஏற்காவிடில் எமக்குப் பாரதூரமான நெருக்கடிகள் ஏற்படும்.

விடை: இது தடியடி நியாயம் எனும் போலியாகும். ஒருவர் தனது அபிப்பிராயத்தையோ அல்லது கூற்றையோ ஏற்க மறுக்கும் ஒருவரை பயமுறுத்தி, அச்சுறுத்துவதன் மூலம் அவற்றை ஏற்கச் செய்ய முனைதலே தடியடி நியாயம் எனும் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் ''X எனும் கொள்கையே மிகவும் சிறந்தது'' என்பதற்கான உண்மையான நியாயங்களை விளக்கி அதனை ஏற்க வைப்பதற்குப் பதிலாக ''பாரதூரமான நெருக்கடி ஏற்படும்'' எனும் அச்சுறுத்தலின் மூலம் அது ஏற்க வைக்கப்பட்டுள்ளது.

(4) வினா: நீங்கள் எனக்கே வாக்களிப்பீர்கள். ஏனெனில் நான் நான்கு முறை தேர்தலில் தோற்றவன். இந்த முறை யாவது என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்.

விடை: இது அனுதாபவழி நியாயம் எனும் போலியாகும். ஓர் வாதத்தில் வெற்றிபெற தவறான வழியில் அனுதாபத்தைப் பெற முயல்வதே அனுதாப வழி நியாயம் எனும் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதற்கான உண்மையான அரசியல் நியாயங்களை எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக வேட்பாளர் தான் நான்கு முறை தேர்தலில் தோற்றவன் எனக் கூறுவதன் மூலம் மக்களின் அனுதாபத்தைப் பெற்று தேர்தலில் வெற்றிபெற முனைகின்றார்.

(5) வினா: அபின் மனிதனை உறங்கச் செய்கின்றது. ஏனெனில் அதற்கு நித்திரையூட்டும் குணம் உள்ளது.

விடை: இது முடிவு மேற்கொளல் எனும் போலியாகும். நிரூபிக்கப்படவேண்டிய எடுப்பு அல்லது கூற்றொன்று நிரூபணமின்றி ஏற்றுக் கொள்ளப்படுதலே முடிவு மேற்கொளல் எனும் போலியாகும்.

ஒருவர் தனது முடிவிற்கான காரணத்தை அதே முடிவின் வடிவத்திலோ அல்லது அதற்குச் சமமான வடிவத்திலோ தருவது முடிவு மேற்கொளல் போலியி னுள் அடங்கும். மேற்கூறப்பட்ட உரையாடலில் எடு கூற்றும் முடிவும் உண்மையில் ஒன்றே. எடுகூற்றும் முடிவு கூற்றும் வடிவமைப்பால் மட்டுமே இங்கு வேறு படுகின்றன.

(6) வினா: கொலை செய்பவர்கள் எல்லோரும் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள். ஆகவே போர்வீரர்கள் தூக்கிலிடப் பட வேண்டியவர்கள்.

விடை: இது தடத்தப் போலியாகும். சாதாரண நிலைமைகளில் உண்மையாக உள்ளதனை அசாதாரண நிலைமைகளி லும் உண்மையெனக் கருதுவதாலோ அல்லது விசேட சந்தர்ப்பங்களில் உண்மையாக உள்ளதனை எல்லாச் சந் தர்ப்பங்களிலும் உண்மையெனக் கருதுவதாலோ ஏற் படுவதே தடத்தப் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் ''கொலை செய்ப வர்கள் எல்லோரும் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள்'' என்பது சாதாரண நிலைமையின்படி உண்மையாகும். இதனைக் கொண்டு ''போர்வீரர்களும் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள்'' என்பது தவறாகும். ஏனெனில் போர் வீரர்கள் போரின்போது கொலைசெய்வது ஏற்றுக்கொள் ளப்படக்கூடிய ஓர் அசாதாரண நிலைமையாகும்.

(7) வினா: A, B, C, D ஆகிய ஒவ்வொருவராலும் இம்மேசை யைத் தூக்க முடியாது. ஆகவே A, B, C, D ஆகிய நால்வராலும் இம் மேசையைத் தூக்க முடியாது.

விடை: இது அமைப்புப் போலியாகும். ஒன்றிலடங்கும் பகுதி களுக்கோ அல்லது அதன் அங்கத்துவங்களுக்கோ பொருந்துவதனை அதன் முழுமைக்கும் பொருந்தும் எனத் தவறாகக் கூறுவதால் ஏற்படும் போலியே அமைப் புப் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் ''A, B, C, D ஆகிய ஒவ்வொருவராலும் இம்மேசையைத் தூகக முடி யாது'' என்பதனைக்கொண்டு ''A, B, C, D ஆகிய நால்வராலும் இம்மேசையைத் தூக்க முடியாது'' என்

பது தவறாகும். ஏனெனில் A, B, C, D ஆகிய நால் வரும் சேர்ந்து இம் மேசையைத் தூக்கக் கூடும்.

(8) வினா: அந்தக் குழு மிகவும் திறமையானது. எனவே அக்குழு விலுள்ள தீபனும் மிகவும் திறமையானவன்.

விடை: இது பிரிப்புப் போலியாகும். ஓர் முழுமைக்குப் பொருந் துவதனை அவற்றிலடங்கும் பகுதிகளுக்கோ அல்லது தனி யன்களுக்கோ பொருந்துமெனத் தவறாகத் கூறுவதால் ஏற்படும் போலியே பிரிப்புப் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் "அந்தக் குழு மிக வும் திறமையானது" என்பதனைக் கொண்டு "அக்குழு விலுள்ள தீபனும் மிகவும் திறமையானவன்" என முடிவு கட்டுவது தவறாகலாம். ஏனெனில் பெரும்பான் மையினர் அக்குழுவில் திறமையானவர்களாக இருப்பின் அக்குழு மிகவும் திறமையானது எனப் பெயர் பெறும். எனவே அக்குழுவிலுள்ள தீபன் திறமையற்றவர்களில் ஒருவனாக அக்குழுவில் இருக்கக் கூடும்.

(9) வினா: நீ X கட்சியைச் சேர்ந்தவன். ஆகவே நீ கூறுவதை நாம் மூக்கியமாகக் கொள்ள முடியாது.

விடை: இது ஆள்நியாயம் எனும் போலியாகும். ஒருவரால் உருவாக்கப்பட்ட கருத்தினை அல்லது கொள்கையினை சரியானதோ அல்லது பிழையானதோ என வாதிடுவ தற்குப் பதிலாக, அவற்றை உருவாக்கிக் கொண்டவரது முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள், உளவியல் நிலை, சமூகப் பின்னணி, குணாதிசயங்கள் மீது இன் னொருவர் கீழ்த்தரமான முறையில் மேற்கொள்ளும் குற்றச் சாட்டுக்களே ஆள்நியாயம் எனும் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் அவன் கூறுவது சரியானதா பிழையானதா என்பதனை ஏற்ற நியாயங் களோடு ஆராய்வதற்குப் பதிலாக, அவனது கட்சிப் பின் னணியைக் கூறி அவன் கூறுவனவற்றை நிராகரிப்பது ஆள்நியாயம் எனும் போலியாகும்.

(10) வினா: பொழுது விடிந்தமைக்குக் காரணம், அதற்கு முன்னர் கூவிய சேவலாகும்.

விடை: இது காகதாலியம் எனும் போலியாகும். காரணமல்லாத ஒன்றைக் தவறாகக் காரணம் எனக் கொள்வதால் ஏற்படுவதே காகதாலியம் எனும் போலியாகும்.

தற்செயலாக நடந்த முன்நிகழ்ச்சியொன்றை அதையடுத்து நடந்த பின்நிகழ்ச்சி ஒன்றிற்குக் காரணம் எனக் கூறுவது இப்போலியினுள் அடங்கும். இங்கு பொழுது விடிந்தமைக்கும், சேவல் கூவியமைக்கும் எவ்விதமான காரண காரியத் தொடர்புகளுமில்லை.

(11) வினா: ''ஆத்மா அழிவில்லாதது'' என்பதை ஏற்றுக்கொள். ஏனெனில் பிளேட்டோ அப்படிக் கூறியுள்ளார்.

விடை: இது கௌரவ நியாயம் எனும் போலியாகும். மதிப்பிற்குரிய ஆதாரம் ஒன்றினைக் காட்டி ஓர் கூற்றை ஏற்கும்படி வேண்டுதலே கௌரவ நியாயம் எனும் போலியாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் ''ஆத்மா அழிவில்லாதது'' என்பதற்கான உண்மையான நியாயங்களை எடுத்துக்கூறி அதனை நிறுவிக் காட்டுவதற்குப் பதிலாக, பிளேட்டோ எனும் மதிப்புக்குரிய ஒருவரைக் காட்டி ''ஆத்மா அழிவில்லாதது'' என்பதனை ஏற்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

(12) வினா: நாம் அவரது அபிப்பிராயத்தை ஏற்கவேண்டும். ஏனெனில் அவர் எமது சமூகத்தின் நன்மைக்காகவே பேசி வருகிறார்.

விடை: இது மாக்கள் நியாயம் எனும் போலியாகும். ஒருவர் தனது முடிவிற்கான உண்மையான ஆதாரங்கள் எதனையும் தராது சாதாரண அல்லது பாமர மக்களை தனது சொற்களின்மூலம் உணர்ச்சிவசப்படுத்தி அவர்களது விருப்பு வெறுப்புக்களை அனுசரித்து தனது கருத்து அல்லது முடிவினை நிறுவ முயல்வதே மாக்கள் நியாயம் எனும் போலியாகும். சுருங்கக் கூறின் பொதுசன உணர்வினால் உந்தப்பட்டு வாதம் புரிதலே மாக்கள் நியாயமாகும்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதியில் நாம் அவரது அபிப்பிராயத்தை ஏன் ஏற்க வேண்டும் என்பதற்கான உண்மையான நியாயங்களைக் கூறுவதற்குப் பதிலாக அவர் சமூகத்தின் நன்மைக்காகவே பேசி வருகிறார் எனக் கூறிப் பொதுமக்களை உணர்ச்சிவசப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட அபிப்பிராயத்தை ஏற்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

# 6. நியமப்போலிகள்

## (வடிவநிலைப்போலிகள்)
## ( FORMAL FALLACIES )

### 1. நாற்பதப்போலி

''நியாயத் தொடையொன்றில் மூன்று பதங்கள் மட்டுமே இருத்தல் வேண்டும்.'' எனும் நியாயத்தொடை விதி மீறப்படுவதன் காரணமாக ஏற்படும் போலியே நாற்பதப்போலியாகும்.

உ-ம் : கோழிகள் எல்லாம் முட்டையிலிருந்து வந்தன. — A
முட்டைகள் எல்லாம் கோழியிலிருந்து வருவன. — A
∴ முட்டைகள் எல்லாம் முட்டையிலிருந்து வருவன. — A

இவ்வாதத்தில் முட்டைகள், முட்டையிலிருந்து வருவன, கோழியிலிருந்து வருவன, கோழிகள் எனும் நாற்பதங்கள் காணப்படுவதால் வாதம் நாற்பதப்போலிக்குட்பட்டுள்ளது.

### 2. மத்தியதம் வியாத்தியடையாப்போலி
### (வியாத்தியில்லா நடுப்போலி)

''எடுகூற்றுக்களில் ஒன்றிலாயினும் மத்தியபதம் வியாத்தியடைந்திருக்கவேண்டும்'' எனும் நியாயத்தொடை விதி மீறப்படுவதன் காரணமாக ஏற்படும் போலியே மத்தியபதம் வியாத்தியடையாப் போலியாகும்.

உ-ம் : எல்லாப் பெண்களும் பொறாமையுடையவர் — A
எல்லா ஆண்களும் பொறாமையுடையவர் — A
∴ எல்லா ஆண்களும் பெண்கள் — A

இவ்வாதத்தில் பொறாமையுடையவர் எனும் மத்திய பதம் எடு கூற்றுக்களிரண்டிலும் A எடுப்பின் பயனிலையாக அமைந்துள்ளதால் வியாத்தியடையவில்லை. இதனால் இவ்வாதம் மத்தியபதம் வியாத்தியடையாப்போலிக்குட்பட்டுள்ளது.

## 3. பெரும்பதச் சட்டவிரோதப்போலி
## (சாத்தியப்பதத்தின் முறையற்ற நெறிப்போலி)

நியாயத்தொடையொன்றின் பேரெடு கூற்றில் வியாத்தியடையாத பெரும்பதம் முடிவுகூற்றில் வியாத்தியடைவதால் ''எடுகூற்றுக்களில் வியாத்தியில்லாதிருக்கும் எப்பதமும் முடிவில் வியாத்தியடையக்கூடாது'' எனும் நியாயத்தொடை விதி மீறப்பட்டு ஏற்படும் போலியே பெரும்பதச் சட்டவிரோதப்போலியாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம் : | எல்லாக் | கிளிகளும் | இறக்கையுடையவை | ஆகும் — A |
| | கிளிகள் | எவையும் | காகங்கள் | அல்ல — E |
| | ∴ காகங்கள் | எவையும் | இறக்கையுடையவை | அல்ல — E |

இவ்விவாதத்தில் இறக்கையுடையவை எனும் பெரும்பதமானது பேரெடுகூற்றில் A எடுப்பின் பயனிலையாக அமைந்துள்ளதால் வியாத்தியடையவில்லை. ஆனால் முடிவு கூற்றிலோ இப்பதமானது E எடுப்பின் பயனிலையாக அமைந்துள்ளதால் வியாத்தியடைந்துள்ளது. இதனால் இவ்வாதம் பெரும்பதச் சட்டவிரோதப்போலிக்குட்பட்டுள்ளது.

## 4. சிறுபத சட்டவிரோதப்போலி
## (பக்கப்பதத்தின் முறையற்ற நெறிப்போலி)

நியாயத்தொடையின் சிற்றெடுகூற்றில் வியாத்தியடையாத சிறு பதம் முடிவு கூற்றில் வியாத்தியடைவதால் 'எடுகூற்றுக்களில் வியாத்தியில்லாதிருக்கும் எப்பதமும் முடிவில் வியாத்தியடையக் கூடாது' எனும் நியாயத்தொடை விதி மீறப்பட்டு ஏற்படும் போலியே சிறுபத சட்டவிரோதப்போலியாகும்.

| | | |
|---|---|---|
| உ-ம் : | எல்லாப் பாம்புகளும் | ஊர்வன — A |
| | நீளமானவை சில | பாம்புகள் — I |
| | ∴ நீளமானவை எல்லாம் | ஊர்வன — A |

இவ்வாதத்தில் நீளமானவை எனும் சிறுபதமானது சிற்றெடு கூற்றில் I எடுப்பின் எழுவாயாக அமைந்துள்ளதால் வியாத்தியடையவில்லை. ஆனால் முடிவு கூற்றிலோ இப்பதமானது A எடுப்பின்

எழுவாயாக அமைந்துள்ளதால் வியாத்தியடைந்துள்ளது. இதனால் இவ்வாதம் சிறுபதச் சட்டவிரோதப்போலிக்குட்பட்டுள்ளது.

## 5. இரு எதிர்மறை எடுகூற்றுப்போலி

''எடுகூற்றுக்களில் ஒன்றேனும் விதி எடுப்பாய் இருத்தல் வேண்டும்'' எனும் நியாத்தொடை விதி மீறப்படுவதன் காரணமாக ஏற்படும் போலியே இரு எதிர்மறை எடுகூற்றுப்போலியாகும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம், | தென்னைகள் | எவையும் கிளையுடையவை அல்ல | — E |
| | பனைகள் | எவையும் கிளையுடையவை அல்ல | — E |
| | ∴ பனைகள் | எல்லாம் தென்னைகள் | — A |

இவ்வாதத்தின் எடுகூற்றுக்களிரண்டும் மறை எடுப்பாக அமைந்துள்ளதால், இவ்வாதம் இரு எதிர்மறை எடுகூற்றுப்போலிக்குட்பட்டுள்ளது.

## 6. இரு குறை எடுகூற்றுப்போலி

''இரு குறை எடுகூற்றுக்களிலிருந்து எவ்வகையான முடிவையும் பெறமுடியாது'' எனும் நியாயத்தொடை விதி மீறப்படுவதன் காரணமாக ஏற்படும் போலியே இரு குறை எடுகூற்றுப்போலியாகும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம் : | சில மாணவர்கள் | உயரமானவர் | — I |
| | சில மாணவர்கள் | சிவப்பு நிறமானவர் | — I |
| | ∴ சிவப்பு நிறமானவர் சிலர் | உயரமானவர் | — I |

இவ்வாதத்தின் எடுகூற்றுக்களிரண்டும் குறை எடுப்பாய் அமைந்துள்ளதால், இவ்வாதம் இரு குறை எடுகூற்றுப்போலிக்குட்பட்டுள்ளது.

## 7. நிபந்தனைப்போலிகள்

நிபந்தனைப் போலியினுள் இருவிதமான போலிகள் அடங்கும்.

(i) காரிய உடன்பாட்டுப்போலி (உடன்பாட்டாகாரிப்போலி)

(ii) காரண (ஏது) மறுப்புப்போலி (மறுப்பாகாரிப்போலி)

### (i) காரிய உடன்பாட்டுப்போலி :

பேரெடுகூற்றான நிபந்தனை எடுப்பின் பின்னடை சிற்றெடுகூற்றில் விதிக்கப்பட்டிருப்பதனைக் கொண்டு முடிவுகூற்றில் முன்ன

டையை விதிப்பதே காரிய உடன்பாட்டுப்போலியாகும். இப்போலி முன்னடையை விதித்தே பின்னடையை விதித்தல் வேண்டும் எனும் விதியை மீறுவதால் ஏற்படுவதாகும்.

உ-ம் : மழை பெய்தால் நிலம் நனையும்
நிலம் நனைந்துள்ளது.
∴ மழை பெய்துள்ளது.

**(ii) காரணமறுப்புப்புப்போலி :**

பேரெடுகூற்றான நிபந்தனை எடுப்பின் முன்னடை சிற்றெடுகூற்றில் மறுக்கப்பட்டிருப்பதனைக்கொண்டு முடிவுகூற்றில் பின்னடையை மறுப்பதே காரணமறுப்புப்போலியாகும். இப்போலி பின்னடையை மறுத்தே முன்னடையை மறுக்கவேண்டும் எனும் விதியை மீறுவதால் ஏற்படுவதாகும்.

உ-ம் : மழை பெய்தால் நிலம் நனையும்.
மழை பெய்யவில்லை.
∴ நிலம் நனையவில்லை.

## 8. உறழ்வுப்போலிகள்

உறழ்வுப்போலியினுள் இருவிதமான போலிகள் அடங்கும்.

(i) உறழ்வெடுப்புக்களிலுள்ள மாற்றங்கள் ஒன்றையொன்று விலக்காதபோது அவை ஒன்றையொன்று விலக்குகின்றன எனத் தவறாகக் கொள்வதால் ஏற்படும். இதனைத் தழுவும் பிரிவுப்போலி என்பர்.

உ-ம் : தீபன் ஒரு தமிழன் அல்லது ஆசிரியன்.
தீபன் ஒரு தமிழன்
∴ தீபன் ஒரு ஆசிரியன் அல்ல.

(ii) உறழ்வெடுப்பொன்றிலுள்ள மாற்றுக்கள் சேர்ந்து உலகிலுள்ள அனைத்தையும் தம்முள் அடக்காதனவாய் உள்ளபோது, அவை அவ்வாறு அடக்குகின்றன எனத் தவறாகக் கொள்வதால் ஏற்படும்.

உ-ம் : மிருகங்கள் நாயாக இருக்கலாம் அல்லது பூனையாக இருக்கலாம்.
அது நாய் அல்ல
∴ அது பூனை.

# 7. உடன் அனுமானத்தில் எழும் போலிகள்

## 1. பொய்யான முரண்பாடு (முரண்பாட்டுப் போலி)

எடுப்பு முரண்பாட்டின் மூலம் பெறப்படும் அனுமானங்கள் தவறாகப் பெறப்படுவதன் விளைவாக ஏற்படுவதே 'முரண்பாட்டுப்போலி' எனப்படும்.

உ - ம்: (1) வழிப்படுத்தியின் பொய்மையிலிருந்து வழிப்பேற்றின் பொய்மையை பின்வருமாறு அனுமானித்தல் முரண்பாட்டுப் போலியாகும்.

A பொய்யெனின் I பொய்.
E பொய்யெனின் O பொய்.

(2) வழிப்பேற்றின் உண்மையிலிருந்து வழிப்படுத்தியின் உண்மையை பின்வருமாறு அனுமானித்தல் முரண்பாட்டுப் போலியாகும்.

I உண்மையெனின் A உண்மை.
O உண்மையெனின் E உண்மை.

## 2. முறையற்ற எதிர்மாற்றம்

''மூல எடுப்பில் வியாத்தியடையாத பதம் எதுவும் முடிவில் வியாத்தியடையக் கூடாது'' எனும் எதிர்மாற்ற விதி மீறப்படுவதால் ஏற்படும் போலியே 'முறையற்ற எதிர்மாற்றம்' எனப்படும்.

இப்போலி A வகை அறுதி எடுப்புக்களையும், அவற்றிற்கு சமமான நிறை நிபந்தனையெடுப்புக்களையும் எதிர்மாற்றம் செய்யும் போது மட்டுமே நேரிடுவதாகும். இவற்றுள் A வகை அறுதி எடுப்பின் முறையற்ற எதிர்மாற்றம் 'சார்பியற் போலி' எனும் பெயரினாலும், நிறை நிபந்தனையெடுப்பின் முறையற்ற எதிர்மாற்றம் 'பின்னடைப் போலி' எனும் பெயரினாலும் அழைக்கப்படும்.

### (அ) சார்பியற்போலி:

உ - ம்: (1) எல்லாப் பூனைகளும் விலங்குகள்.
∴ எல்லா விலங்குகளும் பூனைகள்.

(2) தொழிற்பயிற்சியில்லாதோர் குறைவான கூலி பெறுபவர்கள்.

∴ குறைவான கூலி பெறுபவர்கள் தொழிற்பயிற்சியில்லாதோர்.

— 5

(ஆ) பின்னடைப் போலி:

உ - ம்: (1) மழை பெய்தால் நிலம் நனைந்துள்ளது.
∴ நிலம் நனைந்தால் மழை பெய்துள்ளது.

## 3. முறையற்ற எதிர்வைக்கை

எடுகூற்றில் வியாத்தியில்லாதிருக்கும் ஓர் பதம் முடிவில் வியாத்தியுடையதாகக் காணப்படின் அத்தகைய எதிர்வைக்கையே "முறையற்ற எதிர்வைக்கை" எனப்படும்.

E எடுப்பையோ I எடுப்பையோ அல்லது இவற்றிற்கு சமமான நிபந்தனையெடுப்பையோ எதிர்வைக்கை செய்யும்போதே இப்போலி ஏற்படும்.

உ - ம்: மூலஎடுப்பு: E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.
(ம): A எல்லாக் குதிரைகளும் கொம்பற்றவை ஆகும்.
எ. வை. (எ): A கொம்பற்றவை எல்லாம் குதிரைகள் ஆகும்.

## 4. முறையற்ற நேர்மாற்றம்

'எல்லா S உம் P ஆகும்' என்பதிலிருந்து 'S அல்லாதவை எதுவும் P அல்ல' என்பதைப் பெறுவதும், 'எந்த S உம் P அல்ல' என்பதிலிருந்து' 'S அல்லாதவை எல்லாம் P ஆகும்' என்பதைப் பெறுவதும் "முறையற்ற நேர்மாற்றம்" எனும் போலியாகும்.

நிபந்தனை எடுப்புக்களில் முன்னடையின் பொய்மையிலிருந்து பின்னடையின் பொய்மையை அனுமானித்தலும் முறையற்ற நேர்மாற்றமாகும்.

உ - ம்: மழை பெய்தால் நிலம் நனையும்
∴ மழை பெய்யவில்லை எனின் நிலம் நனையவில்லை.

## 5. பின்னடைப் போலி

நிபந்தனை எடுப்புக்களில் பின்னடையின் உண்மையிலிருந்து முன்னடையின் உண்மையை அல்லது முன்னடையின் பொய்மையிலிருந்து பின்னடையின் பொய்மையை அனுமானிக்கும் நியமப் போலியே பின்னடைப் போலியாகும். இதில் முன்னையது முறையற்ற எதிர்மாற்றத்தால் ஏற்படுவதாகும். பின்னையது முறையற்ற நேர்மாற்றத்தால் ஏற்படுவதாகும்.

உ-ம் : (1) மழை பெய்தால் நிலம் நனைந்துள்ளது.
∴ நிலம் நனைந்தால் மழை பெய்துள்ளது.

(2) மழை பெய்தால் நிலம் நனையும்.
∴ மழை பெய்யவில்லை எனின் நிலம் நனையவில்லை.

# 8. வரைவிலக்கணப்போலிகள்

வரைவிலக்கண விதிகள் மீறப்பட்டு, கையாளப்படும் பதத்தின் பொருட்களைப்பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஏற்படும் போலிகளே **வரைவிலக்கணப்போலிகள்** எனப்படும்.

ஈரடியியல்பான பதங்களின் பிரயோகம், போதிய நிர்ணயமில்லாத சிந்தனை வரைவிலக்கணப் போலிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

அரிஸ்டோட்டிலின் காலந்தொட்டு அளவையியலில் கூறப்பட்டு வரும் முக்கியமான வரைவிலக்கணப்போலிகள் பின்வருவனவாகும்.

## 1. ஒருங்கிசையாப் பண்புகளை உட்படுத்தும் எண்ணக்கருப் போலி

உ-ம் : 'பிரிக்கப்பட முடியாத சடப்பொருட்பகுதி' எனும் கூற்று இப்போலிக்குட்பட்டது. இங்கு 'சடப்பொருள்' என்பது 'பிரிக்கப்படாத தன்மை' யோடு ஒருங்கிசையவில்லை.

## 2. கவர் பொருட்பாடு போலி (இருபொருட் போலி)

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களைத் தரக்கூடிய பதத்தை பிரயோகிப்பதால் ஏற்படுவதே 'கவர் பொருட்பாடு' எனும் போலியாகும்.

உ-ம் : வாழ்வின் முடிவு இன்பமடைதல் ஆகும்.
இறப்பு வாழ்வின் முடிவு ஆகும்.
∴ இறப்பு இன்பமடைதல் ஆகும்.

இங்கு 'வாழ்வின் முடிவு' எனும் சொல் முதலாவது கூற்றில் 'நோக்கம்' எனும் பொருளிலும் இரண்டாவது கூற்றில் 'கடைசி நிலை' எனும் பொருளிலும் கையாளப்பட்டுள்ளது.

## 3. சொல் அணிப்போலி (பேச்சு வடிவப்போலி)

ஒரே இலக்கண வடிவம் எல்லா இடங்களிலும் ஒரே பொருளில் தான் வரும் என்ற தவறான நம்பிக்கையால் எழுவதே சொல் அணிப்

போலி ஆகும். அதாவது சொற்களின் வடிவம் ஒன்றாக இருப்பின் அவைகளின் பொருளும் ஒன்றாக இருக்க வேண்டும் எனும் தவறான நம்பிக்கையால் ஏற்படுவதே சொல் அணிப்போலி ஆகும்.

உ-ம் : பார்க்கப்பட்டது, பார்க்கக்கூடியது; கேட்டது, கேட்கக்கூடியது; ஆகவே விரும்பப்பட்டது, விரும்பப்படக்கூடியது. இங்கு விரும்பப்பட்டது விரும்பப்படக் கூடாததாகவும் இருக்கலாம்.

## 4. வரையறையற்ற கூற்றிலிருந்து வரையறையுடைய கூற்றைப் பெறுவதால் ஏற்படும் போலி

உ-ம் : நீ நேற்று வாங்கியதை இன்று உண்டாய்; நீ நேற்று பச்சை இறைச்சி வாங்கினாய்; ஆகையால் நீ இன்று பச்சை இறைச்சி உண்டாய்.

## 5. வரையறையுடைய கூற்றிலிருந்து வரையறையற்ற கூற்றைப் பெறுவதால் ஏற்படும் போலி

உ-ம் : 'பொழுது போக்கிற்காக உயிர்களைக் கொல்வது கொடூரமானது' எனும் கூற்றிலிருந்து 'பிறரால் கொல்லப்பட்டவற்றை உண்ணுவது கொடூர சிந்தையைக் காட்டும்' எனும் கூற்றினை அனுமானித்தல்.

## 6. சமுதாயப்போலி (அமைப்புப்போலி)

ஒன்றிலடங்கும் பகுதிகளுக்கோ அல்லது அதன் அங்கத்துவங்களுக்கோ பொருந்துவதனை அதன் முழுமைக்கும் பொருந்தும் எனத் தவறாகக் கூறுவதால் ஏற்படும் போலியே சமுதாயப் போலி எனப்படும்.

உ-ம் : கோதுமையில்லாமல் உயிர் வாழலாம்.
அரிசியில்லாமல் உயிர் வாழலாம்.
இறைச்சியில்லாமல் உயிர் வாழலாம்.
முட்டையில்லாமல் உயிர் வாழலாம்.
ஃ உணவில்லாமல் உயிர் வாழலாம்.

## 7. பிரிப்புப் போலி (பிரிவுப் போலி)

ஓர் முழுமைக்கு பொருந்துவதனை அவற்றிலடங்கும் பகுதிகளுக்கோ அல்லது தனியன்களுக்கோ பொருந்துமெனத் தவறாகக் கூறுவதால் ஏற்படும் போலியே பிரிப்புப் போலி எனப்படும்.

உ-ம் : அந்தக் குழு மிகவும் திறமையானது. எனவே அக்குழுவிலுள்ள தீபனும் மிகவும் திறமையானவன்.